செய்தி வெளியீடு எண்: 326 நாள்: 6.5.2008

## செய்தி வெளியீடு

## தமிழ்நாடு சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அவசர கால ஆம்புலன்ஸ் ஊர்தி சேவைத் திட்டம்

## முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில் எம்ரி நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழகத்தில் அவசர கால மருத்துவச் சேவையை மேலும் சிறப்பாகச் செயல்படுத்திட தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காக, ஆம்புலன்ஸ் ஊர்திகள் மூலம் மக்களுக்கு மருத்துவ உதவிகளைச் செய்வதில் நிறைந்த அனுபவம் பெற்றுள்ள எம்ரி (EMRI) நிறுவனத்துடன் இணைந்து, தமிழகத்தில் நோய்களால் பாதிக்கப்படும் மக்களுக்கு அவசர கால ஆம்புலன்ஸ் ஊர்தி சேவைத் திட்டத்தை நடைமுறைப்படுத்திடத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

எம்ரி நிறுவனம் சென்னையில் ஒரு மத்திய அவசர கால செயல்பாட்டு நிலையம் (Emergency Response Center) ஒன்றை அமைத்து அதன் வாயிலாக இந்த அவசரகால சேவையில் ஈடுபடும். மருத்துவம், தீ விபத்து மற்றும் காவல்துறை சம்பந்தமான அனைத்து அவசர தேவைகளுக்கும் கட்டணம் இல்லா தொலைபேசி தொடர்பு எண் 108 மூலம் இந்த மையத்தை மக்கள் 24 மணி நேரமும் தொடர்புகொள்ள முடியும். எம்ரி (EMRI) நிறுவனம் எந்தவிதமான லாபமும் இல்லாமல் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும். சேவை மனப்பான்மையுடன் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதுடன், தொடரும் செலவினத்தில் ஐந்து சதவிகிதத்தை தங்களுடைய பங்களிப்பாகவும் ஏற்றுக்கொண்டு எம்ரி (EMRI) நிறுவனம் அவசரகால ஊர்தி சேவையைச் செயல்படுத்தும்.

இத் திட்டத்தில் மத்திய அவசரகால செயல்பாட்டு நிலையத்தில் நியமிக்கப்பட்டு பணியாற்றும் மருத்துவர், காவல்துறை அலுவலர், தீ அணைப்பு அலுவலர் ஆகியோர் தங்கள் துறை சார்ந்த அவசரகால அழைப்புகள் வருகின்றபொழுது, அவற்றின்மீது உடனடி நடவடிக்கை மேற்கொண்டு மக்களுக்கு உதவிகள் உடனுக்குடன் சென்றடைய ஆவன செய்வர். இந்த நிலையத்தின் அனைத்துச் செயல்பாடுகளும் (எம்ரி) “இ.எம்.ஆர்.ஐ.” (EMRI) நிறுவனத்தினால் செயல்படுத்தப்படும்.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்திட தேவையான பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள், கண்காணிப்பாளர்கள் முதலியோரைத் தேர்வு செய்து,

பயிற்சி கொடுத்து, பணியமர்த்தும் பொறுப்பு எம்ரி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முதல்கட்டமாக, தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் வாயிலாக 198 அவசரகால ஊர்திகளை வாங்கி, குளிர்சாதன வசதியுடன் அவசரகாலப் பராமரிப்பிற்குத் தேவையான உபகரணங்களை பொருத்தி “இ.எம்.ஆர்.ஐ.” (EMRI) நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும். இந்த நிறுவனம் அவசரகால ஊர்திகளை முதல் கட்டத்தில் 14 மாவட்டங்களில் தொடங்கி, பின்னர் மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தும். ஒவ்வொரு ஊர்தியிலும் அவசரகாலத்தில் அளிக்கப்பட வேண்டிய சிகிச்சையில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற பணியாளரும், ஒரு ஓட்டுநரும் பணியமர்த்தப்படுவார்கள். இவர்கள் அவசரகாலத்தில் நோயாளிகளை அழைத்துச் செல்கின்ற நேரத்தில் தேவையான அறிவுரைகளை மத்திய செயல்பாட்டு நிலையத்திலுள்ள (Emergency Response Center) அவசரகாலச் சிறப்பு மருத்துவரின் அறிவுரையைப் பெறுவர். இந்த ஊர்தியை எந்த ஒரு மருத்துவம் சார்ந்த அவசரகாலத் தேவைக்கும் மக்கள் பயன்படுத்துவதற்கு எந்தவித கட்டணமும் செலுத்தத் தேவையில்லை.

இந்த அவசரகால ஊர்தியில், அந்த வண்டியின் நடமாட்டத்தைக் கண்காணிக்க நவீன தகவல் தொழில்நுட்பச் சாதனங்களுடன் **“புவிநிலை கண்டறியும் கருவி” (GPS)** யும் பொருத்தப்படும்.

மாவட்ட அளவில் இயங்கும் அவசர கால ஊர்திகளைக் கண்காணிக்க ஒரு கண்காணிப்பாளர் நியமிக்கப்படுவார். அனைத்து மாவட்ட கண்காணிப்பாளர்களும் மாநில அளவில் ஒரு ஒருங்கிணைப்பாளரால் கண்காணிக்கப்படுவார்கள். மேலும் இவர்கள் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் உள்ள மருத்துவமனைகளைப் பார்வையிட்டு அந்த மருத்துவமனைகளை இத்திட்டத்தில் இணைக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்வார்கள்.

இத்திட்டத்திற்காக ஆலோசனை வழங்க, மாநில அளவில் தலைமைச் செயலரைத் தலைவராகக் கொண்ட ஆலோசனைக் குழுவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட மாவட்ட நிர்வாகக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் குழுக்கள் மாவட்ட அளவில் இத்திட்டத்தின் நடைமுறையை நிர்வகிக்கத் தேவையான ஆலோசனைகளை வழங்கும்.

இத்திட்டத்திற்காகத் தேவைப்படும் கட்டடம், தொழில்நுட்பக் கருவிகள், தளவாடச் சாமன்கள் முதலியவற்றிற்காக முதல் ஆண்டில் 22 கோடியே 89 இலட்ச ரூபாயையும், நிர்வாகச் செலவினம், ஊதியம், எரிபொருள் செலவு, மருத்துவச்

**செலவு, பராமரிப்புச் செலவு, காப்பீட்டு செலவு, பயிற்சி, விளம்பரம் முதலிய செலவினங்களுக்காக 13 கோடியே 13 இலட்சம் ரூபாயையும் தமிழக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.**

**இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முன்னிலையில் இன்று (6.5.2008) தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இந்த ஒப்பந்தத்தில், தமிழக அரசின் சார்பில் மக்கள் நல்வாழ்வுத்துறை சிறப்புச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் திட்ட இயக்குநர், திரு. பி.டபிள்யூ.சி. டேவிதார், இ.ஆ.ப., மற்றும்** EMRI **சார்பாக திரு. வெங்கட், முதன்மை நிர்வாக அலுவலர்** EMRI **ஆகியோர் கையொப்பமிட்டனர்.**

**இந்நிகழ்வின்போது, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் திரு. எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப., உள்துறைச் செயலாளர் திருமதி எஸ். மாலதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலாளர், திரு. வி.கே. சுப்புராஜ், இ.ஆ.ப., தமிழ்நாடு சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தின் முதன்மை நிர்வாக அலுவலர். டாக்டர் டி. குருசாமி,** EMRI **சார்பாக இந்நிறுவனத்தின் தலைவர் (சத்யம் கம்ப்யூட்டர்ஸ்) திரு. பி. ராமலிங்க ராசு ராம்கோ இன்டஸ்டிரீஸ் நிறுவனத்தின் துணைத் தலைவர், திரு.பி.ஆர்.வெங்கட்ராம ராஜு, நேஷனல் ரோல்அவுட் டெக்னாலஜி பங்குதாரர், திரு கிஷோர், தமிழக எம்ரி செயல்திட்டத் தலைவர், திரு.சுப்ரமணியன், திரு. ஸ்ரீவத்சன், ஆகியோர் உடனிருந்தனர்.**

* * *

வெளியீடு: இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புத்துறை சென்னை